
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 14, 2025 Weekly E-paper • June 14, 2025

## நொறுங்கிப் போயின...

## ஒரு விமானமும் ஆயிரம் கனவுகளும் !

சுப. வீரபாண்டியன்

**கீழடிக்கு அறிவியல் ஆதாரமா! இராமர் பாலத்திற்கு எங்கே?**

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

**அமித்ஷாவின் சர்க்கஸ்**

தலையங்கம்

**கேள்வி பிறந்தது இன்று நல்ல பதில் கிடைத்தது அன்று!**

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூன் 14, 2025 Weekly E-paper • June 14, 2025


# நொறுங்கிப் போயின...
# ஒரு விமானமும் ஆயிரம் கனவுகளும் !

சுப. வீரபாண்டியன்

முதலில் அது ஒரு விமான விபத்தாக மட்டுமே உணரப்பட்டது. எத்தனையோ விபத்துகளைப் போல இதுவும் ஒன்று என்ற எண்ணம்தான் எல்லோரிடமும், விபத்து நடந்த நாளில் இருந்தது!

ஆனால் இப்போது ஈரம் உள்ள இதயங்கள் அனைத்தும், இதனை ஒவ்வொரு ஊரிலும் - ஒவ்வொரு வீட்டிலும் - விழுந்த இழவாக எண்ணிக் கலங்குகின்றன!

அரசு செய்த தவறு என்ன, எல்லாவற்றையும் தனியார்மயமாக்குவது சரியா, இது இயந்திரக் கோளாறா இல்லை மனிதர்களின் கவனக்குறைவா, இத்தனை உயிர்களை இழந்து நிற்பதற்கு யார் காரணம் என்பன போன்ற எண்ணற்ற கேள்விகள் எல்லாம் இப்போது பின்னுக்குப் போய்விட்டன!

இவ்வளவுதானா வாழ்க்கை இன்னும் அந்த ஒரே ஒரு உள் மனத்தின் குரல் மட்டுமே ஓங்கி நிற்கிறது இந்த நிமிடத்தில்!

விமானத்தில் ஏறி அமர்ந்து, தங்களின் மூன்று குழந்தைகளோடு மகிழ்ச்சியாய்ப் படம் எடுத்துக் கொண்டு, லண்டன் கனவுகளோடு புறப்பட்ட அந்தக் குடும்பம்.....

கல்லூரிப் படிப்பில் முதலிடமும், தங்கப் பதக்கமும் பெற்று, மேல் படிப்புக்காக லண்டனுக்குப் புறப்பட்ட அந்த மாணவி....

திருமணமானதும் தன்னை விட்டுப் பிரிந்து போன தன் கணவனை, மூன்று மாதங்களுக்குப் பிறகு, காதலோடும் கனவுகளோடும் காணப் புறப்பட்ட அந்த இளம் மனைவி .....

விமானப் பணிப் பெண்ணாக வேலையில் சேர்ந்து விட வேண்டும் என்னும் தன் ஆசை நிறைவேறி, உள்நாட்டுப் பயணங்களில் ஓடித் திரிந்த பின்பு, முதன்முதலாக வெளிநாடு செல்லும் விமானத்தில் பணிப் பெண்ணாக, பூரிப்போடு ஏறிய அந்த மணிப்பூர் பெண்...





முதலமைச்சர் பொறுப்பில் தான் இருந்திருந்தாலும், தன் மகளின் குடும்பத்தைக் காணும் மகிழ்ச்சியோடு லண்டனுக்குப் புறப்பட்ட முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானி.....

இப்படி.... இப்படி.... இன்னும் பல்வேறாக, 230 பயணிகளும் 12 பணியாளர்களுமாய் அந்த விமானத்தில் ஏறி அமர்ந்த போது, யார் நினைத்திருப்பார்கள் இன்னும் ஐந்து நிமிடங்களில் எல்லாம் முடிந்து போகும் என்று !

மிகச் சில நிமிடங்கள்தான்....


நொறுங்கிப் போயின -

அந்த விமானமும், ஆயிரம் கனவுகளும் !

# கீழடிக்கு அறிவியல் ஆதாரமா! இராமர் பாலத்திற்கு எங்கே?

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

*கீழடியில் அகழாய்வை 2014ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பொறுப்பேற்று நடத்திய அலுவலர் அமர்நாத்ராமகிருஷ்ணன் தனது அறிக்கையை 30.01.2023 அன்று இந்திய தொல்லியல் துறைக்கு அனுப்பினார். அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து தற்போது இந்திய தொல்லியல் துறை அறிக்கையில் திருத்தம் செய்யுமாறு கூறியுள்ளது. அண்மையில் சென்னை வந்த ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் "கீழடி அகழ்வாராய்ச்சி அறிக்கையை ஏற்று இசைவளிக்க இன்னும் அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் நிறைய தேவை" என்று கூறியுள்ளார்.*




*கீழடியின் நாகரிகம் (கி.மு 600 - 300) 2600 ஆண்டு பழமையானது என பல்வேறு மட்டத்தில் எடுக்கப்பட்ட ஆறு பொருட்களின் கார்பன் ஆய்வு மூலம் கண்டறிந்து அமெரிக்காவைச் சேர்ந்த பீட்டா ஆய்வகம் சான்றிதழ் அளித்துள்ளது. Carbon Dating, AMS - Accelerator Mass Spectrometry) போன்ற தொல்லியல் துறையின் உயரிய தொழில்நுட்ப முறைகளில் கீழடியில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வறிக்கையில் "முதல் காலகட்டத்தை கி.மு. 8 - 5 ஆம் நூற்றாண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளதை கி.மு என்று மாற்றியமைக்குமாறு இந்திய தொல்லியல் துறை கேட்டுக் கொண்டதன் மூலம் அவர்கள் சிந்து சமவெளி நாகரீகத்திற்கு பிந்தையது தான் கீழடி நாகரீகம் என்று நிறுவ முயற்சிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.*




*ஒன்றிய அரசு 2017 ஆம் ஆண்டு கீழடி அகழாய்வு பணிகளை நிறுத்தியதுடன் அலுவலர் அமர்நாத் ராமகிருஷ்ணன் மற்றும் அவரது குழுவில் பணியாற்றிய 25 பேரையும் கூண்டோடு பணியிட மாற்றம் செய்தது. அதைக் கண்டித்து திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் பேரா.சுப.வீ அவர்களின் தலைமையில் கீழடியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை மைசூர் கொண்டு செல்ல முயன்ற போது சங்கம் 4 அமைப்பைச் சேர்ந்த*

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## அமித்ஷாவின் சர்க்கஸ்

தமிழ்நாட்டில் அடுத்த ஆட்சி தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சிதான், மதுரையில் அமித்ஷா தெளிவாகச் சொல்லிவிட்டார். இது நடக்காது என்பது வேறுவிசயம்.

இல்லையில்லை, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கும் அஇஅதிமுக தலைமையில் ஆட்சி அமைப்போம். இது அமித்ஷா பிடியில் வசமாக சிக்கிக்கொண்டு இருக்கும் எடப்பாடி பழனிச்சாமியின் பேச்சு.

தமிழகத்தில் 'ஜெயலலிதா கட்சித் தலைமையில்' தான் சட்டப்பேரவைத் தேர்தலை சந்திப்பதாக அமித்ஷா கூறியுள்ளார். இது டி.டி.வி.தினகரனின் தமாஷான பேச்சு.

அமித்ஷா மதுரைக்கு வந்தபோது அவரைச் சந்திக்க மனுபோட்டுக் காத்திருந்த இவர் சொல்கிறார் 'ஜெயலலிதா கட்சி' தலைமையில் சட்டப்பேரவைத் தேர்தலாம். அந்தக் கட்சி அஇஅதிமுக என்பதும், அது எடப்பாடியிடம்தான் இருக்கிறது என்பதும் இவருக்குத் தெரியாதா? 'நானும் ரவுடிதான்..நானும் ரவுடிதான்' என்று வடிவேலு சொல்வதுபோல நானும் இருக்கிறேன்..நானும் இருக்கிறேன் என்று காட்டிக்கொள்ளும் உளறல் பேர்வழி இவர்.

தேமுதிக கூட்டணி தலைமையில் தான் ஆட்சியமைப்போம் என்று பிரேமலதா அவர்கள் சொல்லவில்லையே என்பதைத் தவிர, அவர் எந்தக் கூட்டணியில் இருக்கிறார் என்பது அவருக்கே தெரியாது.

பாமகவைப் பற்றி சொல்லவேண்டியதே இல்லை. ஒரு மாம்பழத்திற்காக சண்டைபோட் முருகன்-விநாயகன் கதையாக இருக்கிறது அது.

நடிகர் விஜய், அவருக்கு அரசியலே தெரியாது.

ஆனாலும் இவர்கள் அத்துணை பேரும் பாஜகவின் பிடிக்குள் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இவர்களை வைத்துக் கொண்டு ஆட்சி அமைப்போம் என்று சர்க்கஸ் செய்கிறார் அமித்ஷா.

2026இல் வெற்றிபெற இருக்கும் இந்தியா கூட்டணியை,ஆட்சியமைக்கும் திமுகழகத்தை, மீண்டும் முதல்வராகப் போகும் மாண்புமிகு ஸ்டாலின் அவர்களை அமித்ஷா பார்க்கத்தான் போகிறார், டில்லியில் இருந்து கொண்டு.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

வழக்கறிஞர் கனிமொழி மதி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதை தடுத்தி நிறுத்தினார். அகழாய்வுக்கான நிதியையும் ஒன்றிய அரசு நிறுத்தியதால் தற்போது அகழாய்வு தமிழ்நாடு அரசின் நிதியின் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது.

அறிவியல்பூர்வமாக நவீன தொழில்நுட்ப முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளை ஏற்க மறுக்கும் இவர்கள் எந்த அடிப்படையில் இராமர் பாலம் இருப்பதாகக் கூறி சேது சமுத்திரத் திட்டத்தை தடுத்து நிறுத்தினார்கள். கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களுடன் இந்து மத அடையாளச் சின்னம் ஏதேனும் ஒன்று கிடைத்து இருந்தால் உடனடியாக இவர்கள் இந்த ஆய்வறிக்கையை ஏற்றுக்கொண்டு இசைவளித்திருப்பார்கள். இந்த ஆய்வறிக்கையை இப்படியே வெளியிட்டால் "தமிழர்கள் மதமற்றவர்கள், கீழடி காலக்கட்டத்தில் இந்து மதம் என்ற ஒன்று இல்லை, கீழடி நாகரீகம் சிந்து சமவெளி நாகரீகத்திற்கு மூத்த நாகரீகம்" போன்ற உண்மைகள் உறுதியாகி விடும் என்பதால் கீழடி ஆய்வறிக்கையை வெளியிடாமல் முட்டுக்கட்டை போடுகின்றனர்.

"சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டவை வெறும் கற்பனை அல்ல. அவை உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு"என்பதை கீழடி அகழாய்வு ஆதாரங்களோடு எடுத்துக் காட்டியிருக்கிறது. கீழடி ஆய்வறிக்கையின் அம்சங்களையும், அதை ஏற்க மறுக்கும் ஒன்றிய அரசின் சூழ்ச்சியையும் மக்கள் மத்தியில் விளக்கிட விரிவான பரப்புரை மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழர்களின் தொன்மையை காத்திட போர்க்கொடி உயர்த்துவோம். ●

# கேள்வி பிறந்தது இன்று நல்ல பதில் கிடைத்தது அன்று!

எழில்.இளங்கோவன்

**கேள்வி : ஐயா, அண்மையில் அமித்ஷா மதுரைக்கு வந்தாரே, அது குறித்துத் தங்கள் கருத்து..?**



**தலைவர் டி.எம் நாயர் :** சில வடநாட்டுத் தலைவர்கள் தேசியம் என்று சொல்லிக் கொண்டு, இங்கு வந்து இங்குள்ளவர்களுக்கு அறிவுரைகளைக் கூறத் தலைப் பட்டிருக்கின்றனர்

இங்கு நிலவும் வர்ணாசிரம தர்மம் காரணமாக இந்துக்களுக்குள்ளே பலப்பல வேறுபாடுகள் ஏற்பட்டுப் பலர் சூத்திரர் என்றும், வேசியின் மக்கள் என்றும், படிக்கக் கூடாதவர்கள் என்றும், தீண்டத் தகாதவர்கள் என்றும், நெருங்காதவர்கள் என்றும், பார்க்காதவர்கள் என்றும் இழிவுபடுத்தி வைக்கப்பட்டு உள்ளார்கள்.

இப்படிப்பட்டவர்கள் கோயிலுக்குப் பக்கத்தில் கூட வரத்தகாதவர்கள் என்றும், அவர்கள் எல்லோரும் ஊருக்கு வெளியேதான் வாழவேண்டும் என்றும், அவர்கள் ஓட்டைக் குடிசையில்தான் வாழவேண்டும் என்றும் கொடுமைப் படுத்தப்பட்டு வருகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களை மேலும் கொடுமைப் படுத்தி, இழிவுபடுத்தவே இந்துதர்மம் பேசிக்கொண்டு சில வட இந்தியத் தலைவர்கள் இங்கு வந்து கொண்டு இருக்கிறார்கள்.

இவர்களின் செயல்கள் இங்குள்ள பார்ப்பனர்களுக்கு மேலும் ஆதிக்க, அதிகார வெறியை ஊட்டவே பெரிதும் பயன்படுவதாக அமையும்.

இவர்கள் எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு இங்கு வருகிறார்கள் என்று தெரியவில்லலை.

*(டி.எம்.நாயரின் ஸ்பர்டாங் உரை - 07-10-1917)*

**கேள்வி : ஐயா, திராவிட இயக்கம், இந்துமதம் இன்றைய பார்வை ?**



**அறிஞர் கு.ச. ஆனந்தன் :** தந்தை பெரியாரின் மறைவுக்குப் பிறகு திராவிடர் கழகம் பல கூறுகளாகப் பிரிந்துவிட்டன. என்றாலும் இந்துமதம் பற்றிய பெரியாரின் பார்வைதான் அப்பகுத்தறிவுக் கூறுகளின் தனித்தனிப் பார்வையும் ஆகும்

திராவிட இயக்கங்களின் இக்கட்டான இக்காலகட்டத்தில் இந்துமதத்தின் உயிர்க்கூறான பார்ப்பனியம், தனது உன்னத வளர்ச்சிக் கட்டத்தை நோக்கி மீண்டும் விரைந்து நடைபோடுவதில் வியப்பில்லை. இத்துணைக் காலமாகப் பெற்ற சமுதாய விழிப்புணர்ச்சியும், சாதி ஒழிப்புத் தீவிரமும், இந்துமத எதிர்ப்பும், பழங்கதைகளாகிப் பகற்கனவாகிப் பாழடைந்துவிடுமோ என்ற அச்சம் தமிழகத்தைப் பற்றிக் கொண்டுள்ளது.

இவ்வகையில் இந்துமதம் பற்றிய ’ இருவகையான கண்ணோட்டங்கள் ’ திராவிட இயக்கங்களில் தற்காலிகமாக நிலைபெற்று விட்டன. சாதியமும் இந்துசமயத்தின் உள்ளடக்கம். அத்தகைய இந்துசமயத்தின் அடிப்படை நிலைப்பாடுகளை எதிர்க்காமல் - இழக்காமல்-தகர்க்காமல் - சாதியத்திற்கு எதிர்ப்பான மனப்பக்குவத்தை மக்களிடையே படைக்க முடியாது. புதிய போராட்டக் களத்தைச் செப்பனிடவும் முடியாது.

’திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்துமதம்’ என்ற ஆய்வு இனித் தேவையில்லை. அது முடிவாகிவிட்ட ஒன்று. மாறாக ’திராவிட இயக்கங்களின் செயல்பாட்டில் இந்துமதத்தின் நிலை’ என்ற சீராய்வு *(Review)* தான் இனிவேண்டும். ஏன்? இன்றைய சூழ்நிலையில் ’இந்துமதத்தின் பார்வையில் திராவிட இயக்கங்கள்’ என்ற புதிய ஆய்வைப் பார்ப்பனியம் மேற்கொண்டு விட்டது.

இந்துசமயம் பல்வேறு நம்பிக்கைகளின் கூட்டுக் கிடங்கு என்ற பன்மை நிலையை எதிர்த்தது திராவிட இயக்கம் என்ற ஒருமை அமைப்பு. அந்நிலை இன்று மாறி இந்து சமயத்தின் ஒருமை நிலையை, பன்மை நிலைக்கு ஆளாகிய பல திராவிட இயக்கங்கள் ஆய்வு செய்கிற அவலநிலை உருவாகிவிட்டது. இந்துமதம் படைத்துப் பூசை போட்டுப் போற்றி வளர்த்து வரும் சாத்திரக் குப்பைகளை, புராணப் புரட்டுகளை, செல்லரித்துப் போன ஆகமங்களை, நால்வருண அமைப்பு முறையை, சாதியத்தை, இந்துச்சட்டத்தைத் தகர்த்தெறிய பிளவுபட்டத் திராவிட இயக்கங்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்.

*(திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்துமதம் - சிந்தனைச் செம்மல் கு.ச.ஆனந்தன்)*

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian